2009 ஜூலை 21] [திரு. டி. ஜெயக்குமார்]

விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். தனுஷ்கோடி பகுதியிலிருந்து கடலுக்குப் போன 4 மீனவர்கள் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. ஒரு மீனவரின் பிணம் மட்டும் கிடைத்திருக்கின்றது. மற்ற மூன்று பேரின் நிலைமை என்ன என்பதையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே தெரிவிக்கக் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெயக்குமார் அவர்கள் எடுத்துரைத்துள்ள இந்தச் செய்தியைப் பற்றிய உண்மைகளைத் தெளிவாக அறிந்து, உரியவர்களிடத்திலே இதுகுறித்து வாதாடி, ஏற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆஇ) கலசப்பாக்கம் தொகுதி, நாட்டு வெடிகுண்டு விபத்தில் இறந்தோர் குடும்பங்களுக்கு நிதியுதவி மற்றும் சாதிக் கலவரத்தை ஒடுக்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் தொகுதியிலே இருக்கிற மேல்சோழங்குப்பம் ஊராட்சியிலே 3 நபர்கள் நாட்டு வெடிகுண்டு விபத்தின் காரணமாக இறந்திருக்கிறார்கள். அதேபோல் கலசப்பாக்கம் தொகுதியிலே இருக்கிற சிறுவள்ளூர் ஊராட்சி, அய்யம்பாளையம் கிராமத்தைச் சேர்ந்த ஒரு மாணவன் நாட்டு வெடிகுண்டு விபத்தினால் இறந்திருக்கிறான். இவர்களுக்கு அரசின் சார்பிலே நிதியுதவி வழங்கப்பட வேண்டும் என்றும் கலசப்பாக்கம் தொகுதியிலே இருக்கிற எலத்தூர், மோட்டூர் நட்சத்திரக் கோவில் உண்டியல் கடந்த வெள்ளிக்கிழமை இரவு திருடு போயிருக்கிறது என்பதையும், கலசப்பாக்கம் தொகுதியிலே இருக்கிற மேலாரணியிலே சாதிக் கலவரம் இரண்டு நாட்களாக நடைபெற்றுக் கொண்டிருப்பதையும் கருத்தில்கொண்டு, உடனடியாக அரசு கூடுதல் கவனம் செலுத்தி அந்த சாதிக் கலவரத்தை அடக்க வேண்டும் என்றும் தங்கள்வாயிலாக அரசினுடைய கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.